# அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம்

தகுதியுடையோரின் பெயர் பட்டியலை வெளியிடுதல் மற்றும் மேன்முறையீடுகள் / ஆட்சேபனைகளை கோருதல்

அஸ்வெசும II ஆம் கட்டம் - தகுதியுடையோரின் இரண்டாவது பெயர் பட்டியல் - 2026

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம், நலன்புரி நன்மைகளை வழங்குவதற்காகத் தகுதியுடையோரின் பெயர் பட்டியலை வெளியிடுதல் மற்றும் அந்தப் பட்டியலில் உள்ள பெயர்கள் தொடர்பில் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை கோருவதற்கான தொடர்புடைய உத்தியோகபூர்வ அறிவித்தல் இதுவாகும்.**



## தகுதியுடையோரின் பெயர் பட்டியலை வெளியிடுதல்

- அஸ்வெசும நலன்புரிப் பயன் திட்டத்தின் 2024 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் கட்டத்தின் கீழ் தகுதியுடையோரின் இரண்டாவது பெயர் பட்டியல், தற்போது நாடு பூராகவும் உள்ள சகல பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- தகுதியுடையோரின் இந்தப் பெயர் பட்டியலை நலன்புரிப் பயன்கள் சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.wbb.gov.lk என்ற முகவரிக்குச் சென்றும் பார்வையிடலாம்.

## இரண்டாம் கட்டத்திற்கான இரண்டாவது மேன்முறையீடு / ஆட்சேபனைகளை கோருதல்

- வெளியிடப்பட்டுள்ள இரண்டாவது பெயர் பட்டியலின் பிரகாரம் தகுதி பெறாதவர்கள் அல்லது தாம் தெரிவு செய்யப்பட்டுள்ள வகைப்பாடு (Category) குறித்து திருப்தியடையாத குடும்பங்கள் / நபர்கள் மேன்முறையீடு செய்யலாம்.
- வெளியிடப்பட்டுள்ள பெயர் பட்டியலில் அஸ்வெசும பயன்களைப் பெறுவதற்கு தகுதியற்ற குடும்பங்கள் அல்லது நபர்கள் இருப்பார்களாயின் மற்றும் அந்தத் தகுதியீனத்தை உறுதிப்படுத்த முடியுமாயின், பொதுமக்கள் அது தொடர்பில் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யலாம்.

## மேன்முறையீடுகள் / ஆட்சேபனைகளை சமர்ப்பிக்கும் முறை

- https://eservices.wbb.gov.lk என்ற இணையத் தளத்திற்குப் பிரவேசிப்பதன் மூலம் இணைய வழியில் (Online) மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

இல்லையாயின்

- விண்ணப்பப் படிவங்கள் மூலமாகவும் மேன்முறையீடுகள்/ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை www.wbb.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தர விறக்கம் செய்து கொள்ளலாம்.

இல்லையாயின்

- தமக்குரிய பிரதேச செயலகம் அல்லது கிராம நிலதாரி மற்றும் கிராமத்திற்குப் பொறுப்பான அஸ்வெசும விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து மீண்டும் அந்தப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கலாம்.
- பிரதேச செயலகத்தின் நலன்புரி நன்மைகள் பிரிவின் உத்தியோகத்தர்களின் தொழில்நுட்ப உதவியுடன் இணைய வழியில் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கலாம்.
- பிரதேசத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் நிலையங்கள் (Communication Center) ஊடாகவும் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க முடியும்.
- ஒரு மேன்முறையீட்டாளர் ஒரு மேன்முறையீட்டை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.
- பெயரைக் குறிப்பிடாமலும் பொதுமக்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மேன்முறையீடுகளை முறைமைக்குள் (System) உட்படுத்தும் போது, அனைத்து மேன்முறையீட்டாளர்களும் ஒரு செயலில் உள்ள சரியான கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். தற்போது கணினிக் கட்டமைப்பில் உள்ள தொலைபேசி இலக்கம் தவறாகவோ அல்லது செயலிழந்த நிலையிலோ இருந்தால், பிரதேச செயலகத்திற்குச் சென்று புதிய தொலைபேசி இலக்கத்தை தரவுத் தொகுதிக்குள் பதிவு செய்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகள் / ஆட்சேபனைகளை பொறுப்பேற்கும் இறுதித் திகதி: 2026 ஏப்ரல் 10 ஆம் திகதியாகும்.**


සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD

ජේ.ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, නො.191, ධර්මපාල මාවත, කොළඹ 07
ஜே ஆர் ஜெயவர்தன மையம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 7
J.R. Jayewardene Center, No.191, Dharmapala Mawatha, Colombo 07
0112 196 618 Fax :- 0112 196 613

1924 ක්ෂණික ඇමතුම්